செ.வெ. எண்: 541 நாள்: 14.09.2012

## செய்தி வெளியீடு

## பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினத்தையொட்டி, 132 தமிழக காவல்துறை மற்றும் சீருடை அதிகாரிகளுக்கு பதக்கங்கள் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் ஆணை

தமிழ் நாட்டில் காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித் துறை, சிறைத்துறை, ஊர்க்காவல் படை மற்றும் தமிழ்நாடு விரல்ரேகைப் பிரிவு அதிகாரிகள் சிறப்பாக பணியாற்றியதை அங்கீகரிக்கும் வகையிலும் மற்றும் பணியில் ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்புடன் பணிபுரிந்ததை பாராட்டும் வகையிலும், ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15-ம் நாள் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளன்று தமிழக முதலமைச்சரின் பதக்கங்கள் அறிவிக்கப்படுகின்றன.

இந்த ஆண்டு, காவல் துறையில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் முதல் காவலர் நிலை வரையிலான 100 காவல் துறை அதிகாரிகளுக்கும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறையில் கோட்ட அலுவலர் முதல் தீயணைப்பு வீரர் நிலை வரையிலான 10 அதிகாரிகளுக்கும், சிறைத்துறையில் துணை சிறை அலுவலர் முதல் முதல்நிலை சிறைக் காவலர் வரையிலான 10 அதிகாரிகளுக்கும், ஊர்க்காவல் படையைச் சேர்ந்த ஐவருக்கும் மற்றும் காவல்துறை விரல்ரேகைப் பிரிவில் சிறப்பாகப் பணியாற்றிய இரண்டு காவல் துணை கண்காணிப்பாளர்களுக்கும் ஆக மொத்தம் 127

பேருக்கு அவர்களின் மெச்சத்தகுந்த பணியினை அங்கீகரிக்கும் வகையில் ‘‘மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் அண்ணா பதக்கங்கள்’’ வழங்கிட முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இந்த பதக்கங்களைப் பெறும் அதிகாரிகள் ரொக்கத் தொகையாக ரூ.4,000 முதல் ரூ.10,000 வரை கூடுதலாக பதக்க விதிகளின்படி பெறுவர்.

தீயணைப்பு மற்றும் மீட்பு பிரிவின் ஒரு கோட்ட அலுவலர், ஒரு முன்னணி தீயணைப்போர் மற்றும் மூன்று தீயணைப்போர் அடங்கிய குழுவிற்கு, அவர்கள் தூத்துக்குடி மாவட்டம் வெங்கடாசலபுரத்தில் வெள்ள நீரால் சூழப்பட்ட வீடுகளிலிருந்து 18 பேரை காப்பாற்ற ஆற்றிய வீர தீரச் செயல்களைப் அங்கீகரிக்கும் வகையில், இந்த ஆண்டிற்கான தமிழக முதலமைச்சரின் வீர தீர செயல்களுக்கான பதக்கம் வழங்கப்படுகிறது. மேற்படி பதக்கம் பெறுபவர்கள் இனிமேல் மாதாந்திர பதக்கப்படியாக ரூ.500 ஆயுள் முழுவதும் பெறுவர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் சிறப்பு விழாவில், அறிவிக்கப்பட்டுள்ள பதக்கங்கள் வழங்கப்படும்.

ரா.ராஜகோபால்
முதன்மைச் செயலர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**